

கோவை மாவட்ட பாவேந்தர் பாரதிதாசன் இலக்கிய பேரவை 49–ஆம் ஆண்டு தொடக்க விழா மற்றும் அரசியல் பண்பாளர் பேரூர் ஆ.நடராஜன் அவர்களின் 87 வது பிறந்தநாளை முன்னிட்டு நீலம்பூர் பள்ளி நூற்றாண்டு விழா குழு தலைவர் நீ.வே.இரா.ராமகிருஷ்ணன் தலைமையில் கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் பள்ளிக் குழந்தைகளுக்கு திருக்குறள் புத்தகம் வழங்கினார். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் அன்பரசு (சூலூர் மேற்கு), நந்தகுமார் (மதுக்கரை மேற்கு), மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயலலிதா, சூலூர் மேற்கு ஒன்றிய துணை செயலாளர் சீனிவாசன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் கந்தசாமி, தொ.மு.ச. கோவை மண்டல பொதுச் செயலாளர் பெரியசாமி, கொடி ஆ.நடராசன் அவர்களின் தலைமகள் இராணி சித்ரா, கலங்கல் கிளை செயலாளர் சிவக்குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து - இன்று

# தி.மு.க. மாணவர் அணி நடத்தும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் திரண்டிடுவீர்!

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூன் 23-

சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் மூன்றுமொழிக் கொள்கை மூலம் மறைமுகமாக தமிழ் நாட்டில் இந்தியைத் திணிக் கும் ஒன்றிய பா.ஜ.க. அர சைக் கண்டித்தும், "நான் முதல்வன்" என்ற திட்டத்தின் பெயரை மாற்றிய த.வெ.க. அரசைக் கண்டித்தும் தி.மு.க. மாணவர் அணி சார்பில் இன்று காலை சென்னையில் ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக மாணவர் அணியினர் ஆயிரக் கணக்கில் அணி திரண்டு பங் கேற்றிட வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா. மோ.அன்பரசன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கை:-

தமிழ்நாட்டில் ஒன்றிய பா.ஜ.க. அரசு சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் இந்தியைத் திணிக்கும் வகையில் மும் மொழிக் கொள்கையை அமல்படுத்த நடவடிக் கையை எடுத்து வருகிறது.



மேலும் பி.எம்.ஸ்ரீ திட்டம் மூலமும் இந்தியைத் திணிக்க மறைமுக முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

முதல்கட்ட நடவடிக்கை யாக தமிழ்நாட்டில் உள்ள சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் 9-ஆம் வகுப்பில் மும்மொழிக் கொள்கை அமல்படுத்தப்ப டும் என்று ஒன்றிய அரசு அறி வித்துள்ளது.

இதற்கு தமிழ்நாட்டை ஆளும் த.வெ.க. மவுன அரசு வாய் திறக்காமல் உள்ளது. அதுமட்டும் அல்லாமல் திரா விட மாடல் நல்லாட்சியில் இளைஞர்களின் கல்வி கனவு களை நிறைவேற்றிய அற்புத திட்டமான "நான் முதல் வன்" திட்டத்தின் பெயரை திறமையற்ற த.வெ.க. அரசு, திறன் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்துள் ளது.

கிராமப்புற தாழ்த்தப் பட்ட - பிற்படுத்தப்பட்ட ஏழை மாணவ - மாணவியர் களின் ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். கனவை நனவாக்கிய, நம்மு டைய அன்புத்தலைவர் அவர்களின் உன்னத திட்டங் களில் ஒன்றான இந்த திட் டத்தின் பெயரை மாற்றிய தைக் கண்டித்தும், தமிழ் நாட்டின் மொழி உரிமை - கல்வி உரிமை - திணிக் கப் பட்ட நீட் தேர்வு - ஒன்றியத் தில் கல்வி நிர்வாக அதிகார குவிப்பு மற்றும் இந்தித் திணிப்பு ஆகியவற்றைக் கண் டித்தும், நம்முடைய உயிரி னும் மேலான அன்புத்தலை வர் அவர்களின் உத்தர வின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவு றுத்தலின் படியும், தி.மு.கழக மாணவர் அணி சார்பில் சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகை முன்பு முற்றுகைப் போராட்டம் இன்று காலை நடைபெற உள்ளது. சென்னை சைதாப்பேட்டை கலைஞர் பொன்விழா வளைவு அருகில் இன்று காலை 9.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற உள் ளது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட் டத்தில் இருந்து மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வார்டு - கிளைக் கழகங்களில் உள்ள மாணவர் அணி நிர்வாகிகள், கல்லூரி மாணவ -மாணவியர் கள், இளைஞர்கள் என்று ஆயிரக்கணக்கில் அலைகட லென திரண்டு வந்து பங் கேற்று இக்கண்டன ஆர்ப் பாட்டத்தை வெற்றியடை யச் செய்து நம்முடைய காஞ் சிபுரம் வடக்கு மாவட்டத் திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கை யில் கூறியுள்ளார்.

### எஸ்.பி.க்கே தெரியாமல் சென்னை சென்று

# மாவட்டச் செயலாளர் - அவரது சகோதரரை தேடிய போலீசார்!

## சட்ட விரோதம் என கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணியினர் கண்டனம்!

கரூர், ஜூன் 23 -

எஸ்.பி.க்கு தெரியாமல் சென்னை சென்று, மாவட்ட செயலாளர் மற் றும் அவரது சகோதரரை தேடிய கரூர் போலீசார் நடவடிக்கை சட்டவிரோ தம் என கரூர் கழக வழக்க றிஞர் அணியினர் கண்ட னம் தெரிவித்துள்ளனர்.

சென்னையில், கரூர் மாவட்ட கழக செயலா ளர், சட்டமன்ற உறுப்பி னர் வி.செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக் ஆகியோர் வீடுக ளுக்கு கரூர் போலீசார் சென்றுள்ளனர்.

சோதனை நடத்துவதற் காக சென்றதாக செய்தி கள் வெளியானது. இதனை அடுத்து கரூர் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி யினர் 50க்கும் மேற்பட் டோர் கரூர் மாவட்ட காவல்துறை கண்காணிப் பாளர் அலுவலகத்திற்கு சென்றனர்.

காவல் கண்காணிப்பா ளர் ஹரி கிரண் பிரசாத்தை நேரில் சந்தித்து இது குறித் துக் கூறினர்.

பின்னர் மூத்த வழக்கறி ஞர் நெடுஞ்செழியன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வக் கீல் தாசபிரகாஷ், வக்கீல் விஜயகுமார் ஆகியோர் செய்தியாளரிடம் கூறியது:

சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக் குமார் ஆகியோரை கரூர் போலீசார் சென்னை சென்று தேடுவதாக செய்தி கள் மூலம் அறிந்தோம்.

மாவட்ட காவல் கண் காணிப்பாளர் இடம் எந்த வழக்கில் தேடுகிறீர்கள் என கேட்டோம்.

அதற்கு அவர் கரூர் காவல்துறையினர் அங்கு சென்றார்களா என எங்க ளையே திருப்பிக் கேட்கி றார். இது தொடர்பான ஆதாரங்களை காட்டி விசாரித்தோம். மாவட்ட காவல் கண்காணிப்பாள ருக்கு தெரியாமல் போலீ சார் சென்னை சென்று தேடுதல் பணியில் ஈடுபட் டுள்ளனர்.

ஆனால் அது தெரியாது என காவல் கண்காணிப்பா ளர் சொன்னது வியப்பாக உள்ளது. ஒருவேளை கரூர் காவல்துறை விசார ணைக்கு சென்று இருந்தா லும் இருக்கலாம் நீங்கள் சென்னை கமிஷனர் அலு வலகம் அல்லது டி.ஜி.பி. அலுவலகத்தில் ஆஜராக சொல்லுங்கள் என கூறு கிறார்.

**சட்டத்திற்குப் புறம்பானது!**

என்ன வழக்கு?. எங்கு நடந்தது?. என தெரியாமல் இருவரையும் ஆஜராகும் படி எஸ்.பி. கூறுகிறார். இது சட்டத்திற்குப் புறமா னது. தேவைப்பட்டால் சம்மன் அனுப்பி விசாரிக்க அழைக்கலாம். அதைவி டுத்து இவ்வாறு செய்வது சட்டத்திற்கு விரோதமான செயல். அரசியல் பழிவாங் கும் நடவடிக்கையாகத் தெரிகிறது. இதுபோல பல வழக்குகளை கரூர் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சந்தித்துள்ளது. எந்த வழக் கிற்கும் அஞ்சாமல் சட்டப் படி சந்திப்போம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் ஜென் Z தி.மு.க. சந்திப்பு நிகழ்ச்சி!

## ஆர்வமுடன் திரளான இளைஞர்கள் பங்கேற்பு!

பெரம்பலூர், ஜூன் 23 -

பெரம்பலூர் மாவட் டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத் தில் ஜென் Z தி.மு.க. சந் திப்பு' (Gen Z DMK Meetup) நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பெரம்பலூர் மாவட் டத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் இருந்தும் இளைஞர்களும், கல்லூரி பெ ண்களும் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஆர்வமுடன் கலந்து கொண்ட இவர்கள் கடந்த திராவிட மாடல் அரசின் திட்டங்களை நினைவுகூர்ந்ததுடன் நாளை நமதே என்றும் முழக்கமிட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பா ளர் வீ.ஜெகதீசன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஜூலை-1 முதல் அதிரடி மாற்றம் :

# ரயில்களில் டிக்கெட் இன்றி பயணித்தால் இனி ரூ.500 அபராதம்!

## ரயில்வேயின் வருவாய் இழப்பைத் தடுக்க நடவடிக்கை!

புதுடெல்லி, ஜூன் 23 -

இந்திய ரயில்களில் உரிய பயணச்சீட்டு இல்லா மல் பயணிப்பவர்களுக் கான குறைந்தபட்ச அபரா தத் தொகையை ரயில்வே நிர்வாகம் அதிரடியாக உயர்த்தியுள்ளது.

இதுவரை ரூ.250 ஆக இருந்த இந்த குறைந்தபட்ச அபராதத் தொகை, தற் போது ரூ.500 ஆக இரட் டிப்பாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய விதிமுறைகள் வருகிற ஜூலை 1, 2026 முதல் நாடு முழுவதும் அதி காரப்பூர்வமாக அமலுக்கு வரவுள்ளன.

மத்திய அரசின் 'ஜான் விஸ்வாஸ் சட்டம் 2026' இன் கீழ், ரயில்வே சட்டம் 1989ன் பிரிவுகள் 137 மற் றும் 138ல் மேற்கொள்ளப் பட்ட திருத்தங்களின் அடிப்படையில் இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. கிட்டத்தட்ட 13 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அபராதத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**முக்கிய விதிமுறைகள்:**

**டிக்கெட் இல்லாத பயணம்:**

ரயில்களில் உரிய டிக் கெட் இன்றி பயணிப்போ ருக்கு, பயணக் கட்டணத் துடன் கூடுதலாக குறைந்த பட்சம் ரூ.500 அபராதம் விதிக்கப்படும். இந்த அப ராதத்தைச் செலுத்தத் தவ றினால், சம்பந்தப்பட்ட நபர் மீது நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை எடுக் கப்படும்.

வேறொருவரின் பெய ரில் முன்பதிவு செய்யப் பட்ட டிக்கெட்டுகளைப் பயன்படுத்தி பயணிப்பவர் களின் டிக்கெட் பறிமுதல் செய்யப்படுவதோடு, அவ ருக்கும் ரூ.500 குறைந்த பட்ச அபராதம் விதிக்க ப் படும்.

**பெண்கள் பெட்டியில் ஆண்கள் பயணிப்பது:**

பெண்கள் பயணிப்பதற் காக ஒதுக்கப்பட்ட பெட் டிகள் அல்லது இருக்கைக ளில் அத்துமீறி பயணிக்கும் ஆண்களுக்கு ரூ.2,500 வரை அபராதம் விதிக்க ப் படும். மேலும் அவர்கள் உடனடியாக ரயிலில் இருந்து இறக்கி விடப்படு வார்கள்.

ரயிலிலோ அல்லது ரயில் நிலைய வளாகத் திலோ மது அருந்திவிட்டு ரகளை செய்பவர்கள், சக பயணிகளுக்கு இடையூறு தருபவர்கள் மற்றும் ஆபா சமாக பேசுபவர்களுக்கு ரூ.1,000 அபராதம் விதிக் கப்படும்.

**அனுமதியின்றி வியாபாரம் மற்றும் பிச்சை எடுத்தல்:**

ரயில் பெட்டிகள் மற் றும் நிலையங்களில் அனும தியின்றி வியாபாரம் செய் பவர்கள் மற்றும் பிச்சை எடுப்பவர்களுக்கு ரூ.2,000 அபராதம் விதிக்கப்படும். மீண்டும் இதே குற்றத்தைச் செய்தால் 1 ஆண்டு வரை சிறைத்தண்டனை விதிக்க வும் சட்டத்தில் இட முண்டு.

ரயில்களில் டிக்கெட் இல்லாமல் பயணிப்பதைக் குறைக்கவும், ரயில்வேயின் வருவாய் இழப்பைத் தடுக் கவும் மற்றும் முறையான பயணிகளின் பாதுகாப் பான பயணத்தை உறுதி செய்யவும் இந்த கடுமை யான விதிகள் கொண்டு வரப்பட்டுள்ளதாக ரயில்வே வாரியம் தெரி வித்துள்ளது.

எனவே, பயணிகள் அனைவரும் உரிய பயணச் சீட்டுடன், விதிமுறை களைப் பின்பற்றி பய ணிக்க அறிவுறுத்தப்பட் டுள்ளனர்.

### தமிழ்நாட்டில் பா.ஜ.க. செய்ய முடியாததை த.வெ.க. அரசு மூலம் செய்ய திட்டமிட்டுள்ளதா?

# முதலமைச்சர் டெல்லி சென்று வந்த பின்பு தான் 1,000 சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு அனுமதி!

## த.வெ.க. அரசு கதை விடுவதாக கல்வியாளர்கள் குற்றச்சாட்டு!

சென்னை, ஜூன் 23 -

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் டெல்லி சென்று வந்த பின்பு தான் ஒன்றிய அர சின் ஆணைப்படி 1,000 சிபிஎஸ்இ பள்ளிகளுக்கு ஆன்லைன் மூலம் மும் மொழி திட்டத்துக்கு அனு மதி வழங்கியுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் பாஜக செய்ய முடியாததை தவெக அரசு மூலம் செய்ய திட்டமிட்டுள்ளதா என்று கல்வியாளர்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. மேலும், ஒன்றிய அரசு வகுத்த உத்தரவுப்படி, ஆன்லைனில் அனுமதி கொடுத்து விட்டு ஏதோ பணம் வாங்காமல் கொடுத் ததாக த.வெ.க. அரசு கதை விடுவதாக கல்வியாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முத்தமிழ் அறிஞர் செம் மொழி காவலர் கலைஞர் அவர்களின் தலைமையி லான தி.மு.க. ஆட்சியில் கடந்த 2006-11ம் ஆண்டுக ளில் தமிழகத்தில் சமச்சீர் கல்வி திட்டம் தொடங்கப் பட்டது. அதுவரை அரசு உதவி பெறும் பள்ளிகள் பாடத்திட்டம் ஒன்றாக வும், தனியார் மெட்ரிக்கு லேஷன் பள்ளிகளில் பாடத்திட்டம் சிபிஎஸ்இ சார்ந்தும் இருந்து வந்தது. அதன்பிறகு மெட்ரிக்குலே ஷன் உட்பட அனைத்து பள்ளிகளும் சமச்சீர் கல்வி முறையே பின்பற்ற வேண் டும் என்ற அறிவிப்பு வந்த பிறகு தங்கள் பள்ளிக ளுக்கு தனித்து அடையா ளம் வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ் நாட் டில் பல பள்ளிகள் சிபி எஸ்இ நோக்கி சென்றது. அதன்பிறகு ஆட்சி மாற் றம் ஏற்பட்டு 2011-16 அ.தி. மு.க. ஆட்சியில் சமச்சீர் கல்வியை முடக்க பார்த்து அந்த முயற்சியும் தோல்வி அடைந்தையடுத்து அர சின் உதவியுடன் பல்வேறு பள்ளிகள் சிபிஎஸ்இ பள்ளி யாக மாறியது. அதன்படி அந்த 5 ஆண்டுகளில் மட் டும் சிபிஎஸ்இ பள்ளிகள் எண்ணிக்கை இருமடங்கு அதிகரித்தது. 2021ம் ஆண்டு கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலை மையிலான தி.மு.க. ஆட் சிக்கு வந்த போது ஏறக்கு றைய 1,800 சிபிஎஸ்இ பள்ளிகளும், 13,000 தனி யார் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளும் இருந்தது. 2006-11ம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப் பட்ட தனியார் பள்ளிகள் கட்டணம் நிர்ணயம் செய் யும் குழு ஓய்வு பெற்ற நீதி பதி ஆர்.பாலசுப்ரமணியன் தலைமையில் உருவாக்கப் பட்டு, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டணம் மாற் றவும் அதை பள்ளிகளில் வெளிப்படையாக வைக்க வும் அறிவுறுத்தியது. மேலும் தனியார் பள்ளி கள் சிபிஎஸ்இ பள்ளிக ளாக மாற என்ஓசி கொடுப் பதை நிறுத்தி வைத்தது. இதன் மூலம் தனியார் பள் ளிகள் கட்டண கொள்ளை நடத்தியதை குறைத்தது டன், சி.பி.எஸ்.இ. பள்ளி யாக மாறி இதை தொடர நினைத்ததும் நடக்காமல் போனது.

உடனே தனியார் பள்ளி கள் கூட்டமைப்பு ஒன்றிய அரசை அணுகி சிபிஎஸ்இ பள்ளிகள் தொடங்க தேவையான என்ஓசி கட் டுப்பாட்டை நீக்க வலியு றுத்தியது. அவர்கள் கோரிக்கையை ஏற்று கடந்த 2025ம் ஆண்டு பிப்ர வரி 20ம் தேதி ஒன்றிய அர சின் சிபிஎஸ்இ பள்ளிகள் தொடங்க என்ஓசி இல்லா மலும் விண்ணப்பம் செய் யலாம். அவர்கள் நேரடி யாக மாநில அரசுக்கு கடிதம் எழுதி 30 நாட்க ளில் அனுமதி வழங்க வேண்டும். தவறினால் மேலும் 15 நாள் அவகாசம் வழங்கப்படும். அதிலும் மாநில அரசு உரிய பதில் அளிக்கவில்லை என்றால் ஒப்புதல் வழங்கியதாக கரு தப்படும் என்று விதிகளை ஒன்றிய அரசு மாற்றியது. ஆனாலும் தனியார்கள் பள்ளி நிர்வாகம் சிபிஎஸ்இ பள்ளிகளாக மாற்றுவதற்கு ஆர்வம் காட்டவில்லை. அதனால் குறைவான பள் ளிகளே சிபிஎஸ்இ பள்ளி களாக மாற்றினர்.

மேலும் சிபிஎஸ்இ பள் ளிகள் அனைத்தும் தேசிய கல்விக்கொள்கையின் படி செயல்படும். தாய் மொழி தமிழ் படிக்க வேண்டிய கட்டாயம் இல்லை, இந்தி, சம்ஸ்கிருத திணிப்பு இருப் பதால் கழகத் தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்ஓசி வழங் காமல் இதுவரை அதை நிறுத்தி வைத்தாக கூறப்ப டுகிறது. ஆனால் தற்போது அமைந்துள்ள ஜோசப் விஜய் தலைமையிலான தவெக அரசு மறைமுக கூட்டணியாக பாஜக மனம் நோகாமல் இருக் கும் வகையில் தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளி களை சிபிஎஸ்இ பள்ளிக ளாக மாற்ற என்ஓசி கொடுத்துள்ளது. இதன் மூலம் இனி அவர்களுக்கு என்று கல்விக் கட்டணம் நிர்ணயிக்கும் உரிமை உட் பட அனைத்தும் மாநில அரசின் அதிகார வரம்பில் இருந்து ஒன்றிய அரசு வசம் சென்று விடும். இதை மறைக்க தான் லஞ்சம் இல் லாமல் கொடுக்கப்பட்டது என்ற பிம்பம் கட்டமைக் கப்படுகிறது. எனவே இந்த ஆட்சி 5 ஆண்டுகளை நிறைவு செய்யும் நிலையில்

தமிழகத்தில் ஏறக்கு றைய 13,000 தனியார் பள் ளிகளில் 50% பள்ளிகள் சி.பி.எஸ்.இ. பள்ளிகளாக மாறி இருக்கும். மேலும் ஒரே நாளில் 1,000 சிபி எஸ்இ பள்ளிகளுக்கு அனு மதி கொடுத்து விட்டு தமிழ்நாட்டில் இருமொழி கொள்கையே பின்ப ற்றப் படும் என்று சட்டப் பேர வையில் ஆளுநர் உரையில் தவெக அரசு கூறியுள்ளது. சிபிஎஸ்இ பள்ளிகள் அனைத்தும் புதிய தேசிய கல்விக்கொள்கை படி செயல்படக்கூடியவை, அந்த பள்ளிகளில் இந்தி, சமஸ்கிருதம் போன்ற மொழிகள் கட்டாயம் ஆகும். எனவே அதிகமான தனியார் சிபிஎஸ்இ பள்ளி களுக்கு தமிழ்நாட்டில் அனுமதி கொடுத்து அதன் மூலம் மறைமுகமாக இரு மொழி கொள்கையை நீர்த்து போக செய்யும் திட் டம் தான் இந்த 1,000 சிபி எஸ்இ பள்ளிகளுக்கான அனுமதி என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்த 1,000 சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அனுமதி என்பது தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் டெல்லி சென்று வந்த பின்பு தான் இந்த அனுமதி கள் கொடுக்கப்பட்டுள் ளது. எனவே கழகத் தலை வர், முன்னாள் முதல மைச்சர் முத்துவேல் கரு ணாநிதி ஸ்டாலின் அவர்க ளின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒன்றிய பா.ஜ.க.வால் தமிழகத்தில் எதையெல்லாம் செய்ய முடியவில்லையோ அதை யெல்லாம் மறைமுகமாக, என்னென்ன செய்ய முடி யுமோ அதையெல்லாம் ஒன்றிய பாஜக அரசு தமிழ் நாட்டில் தற்போது முதல் வராக பொறுப்பேற்று உள்ள ஜோசப் விஜய் அவர்கள் மூலம் செய்ய திட்டமிட்டுள்ளதா என்று சந்தேகம் கல்வியாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

# தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைத் தலைவர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.க. மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைத் தலைவராக அலீம் அல் புகாரி அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 600 018.
நாள் : 22.06.2026.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியம், வேப்பத்தூர் பேரூரைக் கழகத்தைச் சேர்ந்த மு.இராமச்சந்திரன் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 600 018.
நாள் : 22.06.2026.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி. சேகர் ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.